
# துர்உபதேசங்கள் (Cults)




**சத்தியத்தை மக்களுக்கு சொல்லி அவர்களை ஆண்டவருடைய மந்தையில் சேர்க்கிற பணியை மிகுந்த பாரத்தோடும், பிரயாசத்தோடும், தியாகத்தோடும், பல நிந்தனைகள், உபத்திரவங்கள் மத்தியிலும் பலர் செய்து கொண்டு வருகிற இக்காலத்தில், இப்படியாய் சேர்க்கப்பட்ட மந்தையை மிக எளிதாக மந்தையை விட்டு விலகிபோக செய்து அவற்றின் ஜீவனை (நித்திய ஜீவன்) பறிக்கிற பொல்லாத ஓநாய் கூட்ட மக்கள் உள்ளனர். இப்படிப்பட்ட ஓநாய் கூட்ட மக்கள் பலவிதம். இவர்களே துர் உபதேசகாரர்கள்.**

**இவர்கள் ஆடுகளை போலவே நடித்து தங்களின் துர் உபதேசங்களால் விசுவாசிகளின் மனதை மயக்கி, ஆதியில் சாத்தானின் வஞ்சகத்தால் ஆதாம் ஏவாள் தேவ மகிமையை இழந்தது போல், தங்களின் வஞ்சக பேச்சினால், உபதேசத்தினால் தெரிந்துகொள்ளப்பட்ட விசுவாசிகளையும் விழுந்து போக செய்வார்கள்.** “ஆகிலும், சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்ததுபோல, உங்கள் மனதும் கிறிஸ்துவைப்பற்றிய உண்மையினின்று விலகும்படி கெடுக்கப்படுமோவென்று பயந்திருக்கிறேன்” (2 **கொ** 11:3). **இவர்களுக்கு எச்சரிக்கையாய் இருக்க வேண்டும் என்று புதிய ஏற்பாட்டில் பவுல் முதலிய பல அப்போஸ்தலர்கள் தங்கள் நிருபங்களில் எச்சரித்து உள்ளனர்** (அப் 20:29) (1 **திமோ** 4:1).

ஏனெனில் சபை ஏற்பட்ட காலத்திலேயே துர் உபதேசகாரர்களும் உண்டாயினர். இவர்களை பற்றி சற்று விரிவாக பார்ப்போம். துர் உபதேசக்காரர்கள் என்று நாம் சொன்னவுடன் நமது நினைவிற்கு வருவது (1) யேகோவா சாட்சிகள் (2) இயேசு மட்டும் (3) ஏழாம் நாள் ஓய்வுகாரர்கள் போன்றோரே. இவற்றை தவிர இன்னும் பல துர் உபதேசங்கள் உள்ளன. இவை எல்லாம் கிறிஸ்தவ தேசங்கள் என்று அறியப்பட்ட தேசங்களில் இருந்து உருவாகி வந்தவைகளே. அமெரிக்காவில் Freemasons, The Church of Scientology போன்ற பல துர் உபதேச ஸ்தாபனங்கள் உள்ளன. இவைகள் ஏற்பட காரணம் என்ன என்பதை ஆராய்வோம்.

இவற்றில் பல ஒரு தனி மனிதனின் தவறான உபதேசத்தினால், அவனை பின்பற்றி பலர் சென்றதினால் உண்டானவைகளே ஆகும். சத்துருவானவன் சில மனிதர்களை வஞ்சித்து, தவறான உபதேசங்களை அவர்கள் மனதில் செலுத்துகிறான். இதற்கு காரணம் அவர்கள் தங்கள் வாழ்வில் பிசாசிற்கு இடம் கொடுத்ததே ஆகும். மேலும் இவர்கள் மூலம், விசுவாசத்தில், சத்தியத்தில் உறுதி இல்லாத மற்ற மக்களையும் வஞ்சித்து அவர்களின் மூலம் ஓர் துர் உபதேச கூட்டத்தை எழுப்புகிறான். மேலும் அதை பல தேசங்களில் பெருக செய்கிறான். இவை எல்லாவற்றிற்கும் மூல காரணம் விசுவாசிகள் சரியான சத்தியத்தை அறியாமல் இருப்பதே, சிலர் சத்தியத்தை அறிந்திருந்தாலும் பணம், புகழ், அதிகாரம் போன்ற சில காரியங்களுக்கு அடிமைப்பட்டு விழுந்து போகின்றனர்.

இதில் நாம் கவனிக்க வேண்டிய ஒன்று என்னவென்றால், நாம் சத்தியத்தை (இயேசுவை) மக்கள் அறிய வேண்டும் என்று பிராயசப்படுகையில், துர் உபதேசகாரர்களும் தாங்களும் துர் உபதேசம் பரவ வேண்டும் என பல காரியங்களை தந்திரமாய் செய்கின்றனர். இவர்கள் ஊழியம் செய்வதே சபை மக்கள் மத்தியில் தான். குறிப்பாக இவர்களுடைய இலக்கு பெண்கள் மற்றும் வாலிப வயதினரே. இதில் மற்றொரு கவனிக்க தக்க காரியம், தேவனுக்காக வல்லமையாக ஊழியம் செய்த ஊழியர்களே நாளடைவில் துர் உபதேசகாரர்களாக மாறியுள்ளனர். இதனால் இவர்களுடைய ஊழியத்தில் பங்கு பெற்று சத்தியத்தை கேட்ட மக்களும் பாதிக்கப்படுகின்றனர். சபையை எதிர்க்க பெலனில்லாத சத்துருவானவன் இப்படி சில மனிதர்கள், சில சூழ்நிலைகளில் தனிப்பட்ட வாழ்வில் தவறி போகும் வேளையில், அவர்களை அடிமைப்படுத்தி, அவர்களின் மூலமாக வஞ்சனையாய் சபையை சீர்குலைக்க பார்க்கிறான்.

எனவே ஒரு தேவ ஊழியரின் மூலம ஓர் உபதேசத்தை கேட்கும்பொழுது அது வேத சத்தியத்தோடு ஒத்து போகிறதா என்று முதலாவது தேவ பிள்ளைகள் ஆராய வேண்டும். ஏனெனில் ஆண்டவரே கூறியுள்ளார், “ஆடுகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல, இதோ, நான் உங்களை அனுப்புகிறேன்; ஆகையால், சர்ப்பங்களைப்போல வினாவுள்ளவர்களும் புறாக்களைப்போலக் கபடற்றவர்களுமாய் இருங்கள்” (**மத்** 10:16). இன்று பல தேவ ஊழியர்கள் ஏழும்பின நம் தமிழ்நாட்டில் இப்படிப்பட்ட துர் உபதேசகாரர்கள் பெருகியுள்ளனர். தனி ஊழியம் (Independent Ministry) என்று கூறிக்கொண்டு எந்த சபையையும் சாராமல் தாங்கள் கூறுவதே சரியான உபதேசம் என்று கூறி மக்களை வஞ்சிப்பவர் ஏராளம் உண்டு. குறிப்பாக தொலைக்காட்சியில் செய்தி கொடுக்கும் பலர் இப்படிப்பட்ட கூட்டத்தை சேர்ந்தவர்களே. இப்படிப்பட்டவர்களை பற்றி வேதம் கூறுகிறது, “அவர்களுடைய முடிவு அழிவு, அவர்களுடைய தேவன் வயிறு, அவர்களுடைய மகிமை அவர்களுடைய இலச்சையே, அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள்” (**பிலி** 3:19).

இதில் முக்கியமான ஒரு துர் உபதேசம் தேவனுக்கும், உலகபொருளுக்கும் ஒரே நேரத்தில் ஊழியம் செய்யமுடியும் என்று போதிப்பதே ஆகும். குறிப்பாக வாலிபர் மத்தியில் இரட்சிப்பு, தேவனோடு உள்ள உறவு, சபை ஐக்கியம், சத்தியத்தை பற்றிய தெளிவு ஆகிய இவை எவை பற்றியும் கூறாமல், அவர்களை உலக பிரகாரமாக ஆடி பாட வைத்து, இதுவே தேவ ஆராதனை என்று கூறுவது ஓர் துர் உபதேசமாகும். இதனால் தேவ பயம், சத்தியத்திற்குரிய தெளிவு எதுவும் இல்லாமல் உலகமக்களை போலவே வாழ்ந்துகொண்டு, எல்லாவற்றையும் அநுபவித்து கொண்டு ஆவிக்குரியவர்களாயும் வாழ முடியும் என வாலிப சமுதாயத்தினர் நினைக்கின்றனர். இதனால் இன்று பல சபை ஐக்கியங்களும், குடும்ப ஐக்கியங்களும் சிதறி போய் கொண்டிருக்கின்றன.

மேலும் சிலர் தொலைக்காட்சி மூலமாக ஒரு குறிப்பிட்ட ஊழியரின் உபதேசத்தை / பிரசங்கத்தை கேட்டு தான் இரட்சிக்கப்பட்டதாகவும். எனவே தினமும் தொலைக்காட்சி மூலம் அந்த குறிப்பிட்ட ஊழியரின் உபதேசத்தை கேட்டு அதன் மூலமாகவே எந்த சபை ஐக்கியமும் இன்றி தான் விசுவாசியாக இருப்பதாகவும் கூறுகின்றனர். ஆனால் வேதம் கூறும் கிறிஸ்தவ வாழ்க்கை இதுவல்ல. இரட்சிப்பின் நிச்சயம், சபை ஐக்கியம், சத்திய தெளிவு, பாடுகளை சகித்தல், தேவ ஊழியத்தை செய்தல் போன்ற இவைகள் இல்லாமல், வெறும்

தொலைக்காட்சி பெட்டி முன் உட்கார்ந்து தினமும் சில ஜெபங்களை, ஸ்தோத்திரங்களை செய்வது ஒருவரை தேவ மனிதராக மாற்றாது.

ஒருவர் இரட்சிக்கப்பட / சத்தியத்தை கேட்க இப்படிப்பட்ட தொலைக்காட்சி ஊழியங்கள் பயன்படலாம். ஆனால் தேவ சபை ஐக்கியத்திற்கு, வேத சத்தியத்துக்கு மாற்றாக தொலைக்காட்சி பிரசங்கங்கள் இருக்ககூடாது. தொலைக்காட்சி பிரசங்கம் செய்வோரும் மக்களை தேவனை நோக்கி, சபை ஐக்கியத்தை நோக்கி நடத்துகிறவர்களாக இருக்க வேண்டுமே ஒழிய தங்களை நோக்கி / தங்கள் தொலைக்காட்சி ஊழியத்தை நோக்கி நடத்த கூடாது. இல்லையேல் இவற்றின் மூலமும் பல துர் உபதேச கூட்டங்கள் எழும்பும். வேத சத்தியத்தையும், தேவ உறவையும், சபை ஐக்கியத்தையும், சுவிசேஷ பாரத்தையும் நோக்கி நடத்தாமல் ஒரு குறிப்பிட்ட மனிதனின் உபதேசத்தையும், ஆராதனை அமைப்பையும் நோக்கி நடத்தும் எந்த ஊழியமும் துர் உபதேச ஊழியமே.

இறுதியாக, சத்துருவானவன் எப்படி வஞ்சகமாய் செயல்படுகிறான் என்பதை கீழ்காணும் You Tube வீடியோவில் காணலாம்.

https://www.youtube.com/watch?v=ZXRMWdVgfyk

இங்கு மேலோட்டமாக நாம் காணும் பொழுது ஒரு பெண், மிகவும் தைரியமாக கடவுளை பற்றியும், கிறிஸ்துவின் வருகையை பற்றியும், தமிழ்நாட்டில் பிரபலமான சினிமா நடிகர்களான ரஜினிகாந்த், கமலஹாசன், இயக்குனர் பாரதிராஜா ஆகியோருக்கு கூறுவதை காணலாம். அப்படிபேசும் பெண், மேற் கூறிய நடிகர்கள் இணைந்து நடித்த ஒரு பழைய படத்தை, மறுபடியும் வெளியிடும் விழாவில், அதை தயாரித்து வெளியிடும் நபரின் மகளாகும். இதை பார்க்கும் பலர் இப்படி சினிமா துறையில், சினிமா நடிகர்களோடு நெருங்கி இருக்கும் இப்படிப்பட்ட மக்களின் விசுவாசத்தையும், பேசும் தைரியத்தையும் கண்டு, சினிமாவில் இருந்து கொண்டே இப்படி ஆண்டவருக்கு வல்லமையாய் ஊழியம் செய்ய முடியும் என்று நினைக்கலாம்.

ஆனால் அதே You Tube பக்கத்தில் Comment பகுதியில், அந்த பெண் தான் ஒரு யேகோவா சாட்சிகளின் கூட்டத்தை சேர்ந்தவள் என்று பகிரங்கமாய் கூறியுள்ளார். மேலும் யேகோவா சாட்சிகளின் வலைதள பக்க தொடர்பையும், தன்னுடைய Facebook பக்க தொடர்பையும் கொடுத்துள்ளார். இவர்களால் சத்திய தெளிவில்லாத

பல விசுவாசிகள் வஞ்சிக்கபடுகின்றனர். குறிப்பாக பெண்களும், வாலிப பிள்ளைகளும்.

மேலும் பல சினிமா நடிகர்கள் தாங்கள் இரட்சிக்கப்பட்டு விட்டதாக கூறும் சாட்சிகளை, பல ஊழிய மேடைகளில் நாம் காணலாம். ஆனால் இப்படியாக இரட்சிக்கப்பட்டு விட்டதாக கூறின மக்களில் பலர், மறுபடியும் சினிமா துறைக்கு செல்வதையும், இன்னும் பலர் தற்போது தமிழ்நாட்டில் நடைபெறும் தேர்தலில் அரசியல் கட்சிகளுக்கு ஆதரவாக, அவர்கள் கொடுக்கும் பணத்திற்காக, பொய்களையும், தரம் தாழ்ந்த பேச்சுகள் பேசுவதையும் நாம் காணலாம். இவர்களுக்கு தேவ பக்தி உள்பட எல்லாமே ஆதாய தொழிலாகும் "கெட்ட சிந்தையுள்ளவர்களும் சத்தியமில்லாதவர்களும் தேவபக்தியை ஆதாயத்தொழிலென்று எண்ணுகிறவர்களுமாயிருக்கிற மனுஷர்களால் உண்டாகும் மாறுபாடான தர்க்கங்களும் பிறக்கும்; இப்படிப்பட்டவர்களை விட்டு விலகு" (I **தீமோ** 6:5). இவர்களை பயன்படுத்தி கிறிஸ்தவ ஊழியம் செய்வோரும் அப்படிப்பட்டவர்களே.

எனவே துர் உபதேசங்கள் பலவிதங்களிலும், நம் விசுவாசத்தில் இருந்து நாம் விழுந்து போக நம்மோடு போராடுகின்றன. ஆனால் தேவ ஐக்கியத்தில், சத்திய தெளிவோடு நாம் இருப்போமானால் நம் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதையும் இப்படிப்பட்டவைகளிலிருந்து நாம் காத்து கொள்ளலாம். பிரதான மேய்ப்பராகிய கிறிஸ்து இயேசுவினிடத்தில் இருந்து எதுவும் நம்மை பிரிக்க இயலாது. ஆமென், அல்லேலூயா.